**O.S.157/2021**

Date : 04.12.2023

பி.சா.2 : பாக்கியமுத்து

<u>பி.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

வழக்கிற்கு சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருடைய அனுபவம் 40 வருடம் இருப்பதாக கூறி என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரசொன்னார் என்றால் சரியல்ல எனக்கு தெரியும். என்னை 1ம் பிரதிவாதிதான் அழைத்து வந்தார். வழக்கின் 1ம் பிரதிவாதியின் அப்பாவும் என் தகப்பனாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.